# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 83 /பேரூ/2026**
**நாள் : 24..08 .2026**

N. ராமு, – முறையீட்டு மனுதாரர்
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

1. செயல் அலுவலர்,
   வடக்கனந்தல் பேரூராட்சி,
   கள்ளக்குறிச்சி மாவட்டம்.
2. க. கணேசன்,
   வடக்கனந்தல், கள்ளக்குறிச்சி மாவட்டம்
   (கட்டட உரிமையாளர்)
3. க. சிவகாமி,
   வடக்கனந்தல், கள்ளக்குறிச்சி மாவட்டம் -- எதிர் மனுதாரர்கள்
   (கட்டட உரிமையாளர்)

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், 96, கிழக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. ராமு என்பவரது 20.03.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.03.2026 அன்று பெறப்பட்டு, 83/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கச்சிராயப்பாளையம், 96, கிழக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. ராமு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 20.03.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“நான் மேற்படி கச்சிராயப்பாளையத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கச்சிராயப்பாளையம் கிராம பொது நலக் குழு தலைவராக உள்ளேன். சின்னசேலம் வடக்கனந்தல் பேரூராட்சி வார்டு எண். 10க்குட்பட்ட எல்.எப்.ரோடு, கச்சிராயப்பாளையம் கிராம புல எண். 236/24ல் திரு. கணேசன் த/பெ கந்தசாமி என்பவருக்கு சொந்தமான இடத்தில் (எண். 97, G.S.L. Building, L.F. Road, Near Vasavi Mahal, Kachirayapalayam) உரிய கட்டிட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக வணிக பயன்பாட்டிற்கான ஒரு கட்டிடத்தை கட்டியுள்ளார். இந்த

கட்டிடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்படவில்லை. மேற்படி கட்டிடம் கட்ட உரிய அனுமதி எதனையும் வடக்கனந்தல் பேரூராட்சி கொடுக்கவில்லையென வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர், தகவல் அறியும் உரிமைச் சட்டம் வாயிலாக கடந்த 16.02.2026 தேதியில் எனக்கு பதில் அளித்துள்ளார்.

2) மேற்படி சட்டத்திற்குப் புறம்பான கட்டிடத்தை அகற்றக் கோரியும், அதன் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் கடந்த 28.01.2026 தேதியில் வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலருக்கு விரைவு அஞ்சல் மூலம் நான் புகார் அனுப்பியிருந்தேன். அதன் நகலினை கடலூரிலுள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பியிருந்தேன். ஆனால் மேற்படி என் புகாரின் மீது வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரும், கடலூர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வு W.P. (MD) No.3140/2019 என்ற வழக்கில் சட்டவிரோதமாக உரிய அனுமதியின்றி கட்டிடம் கட்டியோர் மீது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் குற்றவியல் நடவடிக்கை எடுத்து அனுமதியின்றி கட்டப்பட்ட, கட்டிடத்தை அகற்ற நடவடிக்கை எடுப்பதுடன், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப் பிரிவு 134படி மேற்படி சட்டவிரோத கட்டிட உரிமையாளர் மீது ரூ.1,00,000/- அபராதம் விதித்து நடவடிக்கை எடுப்பதுடன், கட்டிடத்தை அகற்ற கால தாமதம் செய்யும் பட்சத்தில் கட்டிடத்தின் ஒரு சதுர அடிக்கு ரூ.50/- வீதம் கூடுதலாக தொகை வசூலிக்க உத்திரவிட்டுள்ளது. மேலும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்ற உள்ளாட்சி அமைப்புகள் காவல் துறை உதவியை நாடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அனுப்பும் பொருட்டு தமிழ்நாடு நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், தமிழக காவல் துறை இயக்குநருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

4) மேற்படி உயர்நீதிமன்ற தீர்ப்பை பின்பற்றி வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் எனது 28.01.2026 தேதியிட்ட புகாரில் கண்டுள்ள சட்டவிரோத கட்டிடத்தை அகற்றவும் அதன் உரிமையாளர் மீது குற்றவியல் வழக்கு தொடுக்கவும் மற்றும் அபராதம் விதிக்கவும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக அனுமதியின்றி சட்டவிரோதமாக கட்டிடம் கட்டியவர்களுக்கு உடந்தையாக வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரும், கடலூர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் செயல்படுவதாக தெரிகிறது. மேலும் என் புகாரில் கண்டுள்ள கட்டிடத்திற்கு மின் இணைப்புகள் பெறப்பட்டு வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரால் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இது இந்திய அரசியலமைப்பு சட்ட உறுப்பு 265க்கு புறம்பானதாகும். மேற்படி சட்டவிரோத கட்டிடத்தால் அரசுக்கு பெரும் வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, தாங்கள் தயவு செய்து என்னுடைய 28.01.2026 தேதியிட்ட புகாரின் அடிப்படையில் கச்சிராயப்பாளையத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது மேற்படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்புப்படி நடவடிக்கை எடுக்காத கடமை தவறிய வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் கடலூர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், மேற்படி என் புகாரின் அடிப்படையில் கச்சிராயப்பாளையத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்புப்படி நடவடிக்கை எடுத்து அதனை அப்புறப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் நியாயமெனக் கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் முறைமன்ற நடுவரை நான் பிரார்த்திக்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். அ1/283/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, கச்சிராயப்பாளையம் எல்.எப். ரோட்டில் திரு. க. கணேசன், த/பெ கந்தசாமி மற்றும் அவரது மனைவி திருமதி. சிவகாமி, க/பெ. கணேசன் ஆகியோருக்கு சொந்தமான இடத்தில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு உரிய கட்டிட அனுமதியினை இணைய தளம் வாயிலாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள இவ்வலுவலக ந.க.எண். 10/அ1/2024, நாள் 15.11.2024 முறையே அறிவிப்பு வரிசை எண். 11 மற்றும் 12ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள மனுதாரரால் கட்டிட அனுமதி வழங்க கோரி இவ்வலுவலகத்திற்கு நேரில் / இணைய தளத்தின் வாயிலாக எவ்வித விண்ணப்பமும் வரப்பெறவில்லை. ஆனால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு சொத்துவரி விதிப்பு செய்து தரக்கோரி கட்டிட உரிமையாளர்களிடமிருந்து இடத்திற்கான ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் வரப்பெற்றது.

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் 06.02.2024 நாளிட்ட சுற்றறிக்கை எண்.1, ந.க.எண். 1469/2023/இ5ல் வரி விதிக்கப்படாத கட்டிடங்களுக்கு வரி விதிப்பது தொடர்பாக தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி வரி விதிக்கப்படாத கட்டிடங்களுக்கு 13 அரையாண்டுகளுக்கு வரி விதிப்பு கணக்கீடு செய்யப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் திரு. கணேசன், த/பெ. கந்தசாமி என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கும், அவரது மனைவி திருமதி. சிவகாமி க/பெ. கணேசன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கும் சொத்துவரி நிர்ணயம் செய்வதற்கான சிறப்பு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டு அதன் பின்னர் 13 அரையாண்டிற்கான சொத்துவரி தொகைகள் மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

திரு. ந. ராமு என்பவரால் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன்படி தகவல் கோரி வரப்பெற்ற 17.12.2025 நாளிட்ட மனுவிற்கு இவ்வலுவலக கடித ந.க. எண். 268/2025/அ1, நாள் 14.01.2026ன்படி தகவல் வழங்கப்பட்டு மனுதாரரால் பேரூராட்சி அலுவலக ஆவணங்களை 05.02.2026 அன்று பார்வையிட அனுமதிக்கப்பட்டு மனுதாரர் கட்டிட உரிமம் வழங்கும் பதிவேட்டினை பார்வையிட்டு கச்சிராயப்பாளையம் சர்வே எண். 236/24ல் திரு. கணேசன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டப்பட்டதற்கு பேரூராட்சியால் கட்டிட உரிமம் வழங்கப்பட்டதாக தெரியவில்லை எனவும், அவ்விவரத்தினை வழங்க கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இவ்வலுவலக ந.கஎண். 268/2025/அ1 , நாள் 16.02.2026ன்படி கூடுதல் தகவல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கையும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் வழங்க கோரிக்கையும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பதால் தனித்தனியாக நடவடிக்கை விவரம் தெரிவிக்காமல் மனுதாரருக்கான தகவல்கள் உரிய காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ள கட்டிடத்திற்கு விதிமுறைகளுக்குட்பட்டு வரிவிதிப்பு செய்து பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமின்றி சொத்துவரித் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் முதலாவது எதிர்மனுதாரரான வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்களான கட்டட உரிமையாளர்கள் திரு. க. கணேசன் மற்றும் திருமதி. க. சிவகாமி ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 03.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 18.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. N. ராமு என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 03.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, எல்.எப்.ரோடு, கச்சிராயப்பாளையம் கிராம புல எண். 236/24ல் திரு. கணேசன் என்பவர் வடக்கனந்தல் பேரூராட்சியின் கட்டட வரைபட அனுமதியின்றி விதிமீறி வணிகக் கட்டடம் கட்டியுள்ளார்.

- மேற்படி கட்டடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்படாததால் நாள்தோறும் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன.

- பேரூராட்சியின் அனுமதியற்ற மேற்காணும் கட்டடம் குறித்து வடக்கனந்தல் பேரூராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

- மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு எண். W.P. (MD) No. 3140/2019 என்ற வழக்கில் உரிய அனுமதியின்றி கட்டடம் கட்டியோர் மீது உள்ளாட்சி அமைப்புகள் குற்றவியல் நடவடிக்கை எடுத்து, அனுமதியற்ற கட்டடத்தை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்ப்புரை வழங்கியுள்ள நிலையில், மேற்காணும் புகாராக தெரிவிக்கும் கட்டடம் தொடர்பாக எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாத வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், விதிமீறி கட்டப்பட்ட கட்டடத்தை அகற்றவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. முதலாவது எதிர்மனுதாரரான வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் 03.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட 10வது வார்டு, எல்.எப்.ரோடு, கச்சிராப்பாளையம் என்ற முகவரியில் பேரூராட்சியின் அனுமதியின்றி திரு. க. கணேசன் மற்றும் அவரது மனைவி திருமதி. க. சிவகாமி ஆகியோர் கட்டடம் கட்டியிருப்பதாக தெரிய வந்ததை தொடர்ந்து, இப்பேரூராட்சியின் 15.11.2024 நாளிட்ட அறிவிப்பில் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடத்திற்கு உரிய கட்டட அனுமதியினை இணையதள வாயிலாக விண்ணப்பித்து கொள்ளுமாறு மேற்படி கட்டட உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

- மேற்படி கட்டப்பட்ட கட்டடத்திற்கு கட்டட அனுமதி வழங்கக் கோரி இப்பேரூராட்சியில் நேரில் / இணையதள வாயிலாக எவ்வித விண்ணப்பமும் வரப்பெறவில்லை.

- ஆனால் மேற்படி கட்டடத்திற்கு அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு சொத்துவரி செய்து தரக்கோரி கட்டட உரிமையாளர்களால் விண்ணப்பம் செய்ததன் காரணமாக பேரூராட்சிகளின் இயக்குநரின் **06.02.2024** நாளிட்ட சுற்றறிக்கையின்படி, சொத்துவரி நிர்ணயம் செய்து, **13** அரையாண்டிற்கான சொத்துவரி தொகை கட்டட உரிமையாளர்களால் **17.03.2025** அன்று செலுத்தப்பட்டுள்ளது.

- 2000 சதுர அடிக்கு மேல் உள்ள வணிகப் பயன்பாட்டிலுள்ள கட்டடங்களுக்கான கட்டட அனுமதி வழங்குவது தொடர்பாக நகர் ஊரமைப்புத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இந்நிலையில் மேற்படி கட்டடம் **2000** சதுர அடிக்கு மேல் உள்ள வணிகக் கட்டிடம் என்பதால் நகர ஊரமைப்புத் துறையின் வாயிலாக கட்டடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கக் கூடும் என்பதால் அரசாணை எண். **195**, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு துறை, நாள் **05.11.2022**ன்படி படிவம் **1** விதி **3**ன் கீழ் கட்டட உரிமையாளருக்கு அறிவிப்பு சார்வு செய்து அதன் நகலினை உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை அவர்களுக்கு அனுப்பி வைத்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். உரிய படிவம் **1**ஐ கட்டட உரிமையாளருக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அதன் நகலினை இப்பேரூராட்சி மூலம் நகர் ஊரமைப்புத் துறைக்கு அனுப்பப்படவில்லை.

- தற்போது இக்கட்டடத்தின் மீதான தொடர் நடவடிக்கையினை இப்பேரூராட்.சி மூலம் எவ்வித காலதாமதமின்றி மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. இதற்கிடையில், இரண்டாவது மற்றும் மூன்றாவது எதிர்மனுதாரர்களான (கட்டட உரிமையாளர்கள்) திரு. க. கணேசன் என்பவரும் மற்றும் அவரது மனைவி திரு. க. சிவகாமி என்பவரும் தங்களது **02.07.2026** நாளிட்ட கடிதங்களில் தங்களுக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் **03.07.2026** அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனவும், தங்களின் சார்பாக தங்களது மகனான திரு. க. லோகநாதன் என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி அளிக்குமாறு வேண்டி கேட்டுக் கொண்டுள்ளனர்.

8. மேற்காணும் எதிர்மனுதாரர்களான கட்டட உரிமையாளர்களின் கோரிக்கையை இம்முறைமன்ற நடுவத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் கட்டட உரிமையாளர்கள் சார்பாக திரு. க. லோகநாதன் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் **03.07.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் -

- கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட **10**வது வார்டு, எல்.எப்.ரோடு, கச்சிராப்பாளையத்தில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் எனது தந்தை க. கணேசன் மற்றும் எனது தாயார் க. சிவகாமி ஆகியோர் பெயரில் வணிகக் கட்டடம் **2021-2022**ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

- இதற்கிடையில் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எங்களது முகவரிக்கு வரப்பெற்ற **15.11.2024** நாளிட்ட அறிவிப்பில், மேற்காணும் கட்டடமானது பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டியிருப்பதாக தெரிய வருவதால்,

இக்கட்டடத்திற்கு கட்டட அனுமதியினை நேரில் / இணையதள வாயிலாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

- இந்நிலையில், மேற்படி கட்டடத்திற்கு அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு சொத்துவரி நிர்ணயம் செய்து தரக் கோரி எனது தந்தையார் சமர்ப்பித்த மனுவின் அடிப்படையில் பேரூராட்சியில் 2018-19ஆம் ஆண்டு முதல் 2024-25 வரை பேரூராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி 17.03.2025 அன்று செலுத்தப்பட்டது.

- வடக்கனந்தல் பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு அனுமதி வழங்கக் கோரி விண்ணப்பம் செய்ய உள்ளோம் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் முதல் எதிர்மனுதாரரான வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் சார்பாக விசாரணைக்கு ஆஜரான திரு. க. லோகநாதன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. N. ராமு என்பவர் தனது புகார் மனுவில், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, எல்.எப்.ரோடு, கச்சிராயப்பாளையம் கிராம புல எண். 236/24ல் திரு. கணேசன் என்பவர் வடக்கனந்தல் பேரூராட்சியின் கட்டட வரைபட அனுமதியின்றி விதிமீறி வணிகக் கட்டடம் கட்டியுள்ளதாகவும் மற்றும் அக்கட்டடத்தில் போதிய வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

மேற்படி 2000 சதுர அடிக்கு மேல் பரப்பளவுள்ள அனுமதியற்ற வணிகக் கட்டடத்திற்கு நகர ஊரமைப்பு துறையின் வாயிலாக உரிய அனுமதி பெறுமாறு பேரூராட்சி செயல் அலுவலரால் 15.11.2024 நாளிட்ட அறிவிப்பு கட்டட உரிமையாளர்களுக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது எனவும், 2000 சதுர அடிக்கு மேல் வணிகப் பயன்பாட்டிலுள்ள கட்டடங்களுக்கான கட்டட அனுமதி வழங்குவது தொடர்பாக நகர ஊரமைப்புத் துறை மூலம்தான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

கட்டட உரிமையாளர்கள் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான திரு. க. லோகநாதன் என்பவர் மேற்காணும் கட்டடமானது பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதன் மூலம் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கட்டடமானது பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது.

இந்நிலையில் வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட 10வது வார்டு, எல்.எப்.ரோடு, கச்சிராயப்பாளையம் என்ற முகவரியில் உள்ள வணிகக் கட்டடமானது பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டது என்பது தெரிய வந்ததும் பேரூராட்சி செயல் அலுவலர் 15.11.2024 நாளிட்ட அறிவிப்பை கட்டட உரிமையாளர்களுக்கு சார்பு செய்து, அதன் பின்னர் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை நடைபெற்ற நாள் வரை, மேற்காணும் அனுமதியற்ற கட்டடம் தொடர்பாக எவ்வித சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இக்கட்டடமானது 2000 சதுர அடிக்கு மேல் இருப்பதால் கட்டட அனுமதி நகர் ஊரமைப்புத் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதன் மூலம், பேரூராட்சி நிர்வாகத்தின் செயல்முறையில் மெத்தனத்தையும் மற்றும் அலட்சியபோக்கினையும் காட்டுகிறது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இவ்வாறு

அனுமதியற்ற கட்டடம் கட்டப்பட்டதை தெரிந்தும், அக்கட்டடத்தின் மீதான உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளாத சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மேற்காணும் அனுமதியற்ற கட்டடம் தொடர்பாக அரசாணை (நிலை) எண். 195, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி UD 4(1) துறை. நாள் 05.11.2022ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படியும் மற்றும் அனுமதியற்ற கட்டடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் வழங்கியுள்ள ஆணைகளில் உள்ள வழிகாட்டுதலின்படியும் உரிய சட்டப்பூர்வ தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்துமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. N. ராமு,
   96, கிழக்கு தெரு, கச்சிராயப்பாளையம்,
   சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்,
2. செயல் அலுவலர்,
   வடக்கனந்தல் பேரூராட்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம்.
3. திரு. க. கணேசன்,
   59, நடுத்தெரு, அக்கராய பாளையம், வடக்கனந்தல்,
   சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606 207.
4. திருமதி. க. சிவகாமி,
   க/பெ. கணேசன், 59, நடுத்தெரு, அக்கராய பாளையம், வடக்கனந்தல்,
   சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606 207.
5. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
6. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
   சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

~~இகோ~~/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. க. [signature] 1/9/26

செயலாளர்

01/9/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032